**தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–6**

**ந.க.எண்: 43107 /சி1/ இ1/2021, நாள்: 18.02.2021**

****

பொருள் : தமிழ்நாடு பள்ளிக் கல்விப்பணி – 01.01.2021 நிலவரப்படியான அரசு உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் பதவிக்கு தகுதிவாய்ந்த ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு /பணிமாறுதல் மூலம் பணி ஒதுக்கீட்டு ஆணை வழங்க – கலந்தாய்வு நடைபெறுதல் – சார்பு.

பார்வை சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண். 43107/சி1/இ1/2020, நாள், 15.02.2021

------

01.01.2021 நிலவரப்படியான தகுதிவாய்ந்தோர் பெயர்ப் பட்டியலின்படி அரசு / நகராட்சி உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்கள், அதனையொத்த பணிநிலையில் உள்ள ஆசிரியர்கள் மற்றும், பட்டதாரி ஆசிரியர் பதவியிலிருந்து பதவி உயர்வு மூலம் முதுகலை ஆசிரியர்களாகப் பணிபுரிபவர்களுக்கு பதவி உயர்வு /பணிமாறுதல் மூலம் அரசு உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் பதவிக்கு பணி இட ஒதுக்கீட்டு ஆணை வழங்கும் கலந்தாய்வு 20.02.2021 அன்று காலை 8.45 மணிக்கு சென்னை –04, சாந்தோம் மேல்நிலைப்பள்ளி நடைபெறவுள்ளது. இக்கலந்தாய்வில் பெயர்ப்பட்டியல் வரிசை எண்ணில் உள்ள தங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் 1 மணிநேரம் முன்னதாக கலந்தாய்வு நடைபெறும் இடத்திற்கு தவறாமல் கலந்து கொள்ளும் வகையில் தகவல் தெரிவித்திட அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்காண் கலந்தாய்வில் பட்டியல் வரிசை எண்ணில் உள்ள அனைத்து ஆசிரியர்களும் தவறாமல் கலந்து கொள்ளவும், தனியர் அரசு உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் பதவியில் பணியில் சேர விருப்பம் இல்லை எனில் தற்காலிக/நிரந்த உரிமைவிடல் உடனடியாக கலந்தாய்வு அன்றே விண்ணப்பம் அளிக்கவும் சார்ந்த ஆசிரியர்களுக்கு தெரிவித்திட அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| அரசு உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியராகப் பதவி உயர்வு/பணிமாறுதல் வழங்குதற்கான கலந்தாய்வு | | | |
|---|---|---|---|
| கலந்தாய்வு நடைபெறும் நாள் | 20.02.2021 | நேரம் | காலை 8.45 மணி |
| கலந்தாய்வு நடைபெறும் இடம் | சாந்தோம் மேல்நிலைப்பள்ளி சென்னை –04 | | |

18/02/2021

பள்ளிக்கல்வி இயக்குநர்.

**பெறுநர்**

அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்